SOSA-I-M

# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

**தமிழ்**

மதிப்பெண்: 60

வகுப்பு - ஏழு

நேரம்: 2 மணி

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** $8 \times 1 = 8$

1. வேயாமாடம் எனப்படுவது ________________

   அ) சாந்தினால் பூசப்படுவது

   ஆ) துணியால் மூடப்படுவது

   இ) வைக்கோலால் வேயப்படுவது

2. தொல்காப்பியம் கடற்பயணத்தை ________________ வழக்கம் என்று கூறுகிறது.

   அ) முந்நீர் ஆ) நன்னீர் இ) தண்ணீர்

3. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ________________

   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம்

4. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது ________________

   அ) குயில் ஆ) மயில் இ) அன்னம்

5. கல்வியில்லாத நாடு ________________ வீடு

   அ) வாசலில்லாத ஆ) விளக்கில்லாத இ) கதவில்லாத

6. பெயர்ப்பகுபதம் ________________ வகைப்படும்.

   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு

7. மிளகாய் வற்றலின் ________________ தும்மலை வரவழைக்கும்.

   அ) நெடி ஆ) காட்சி இ) மணம்

8. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எது?

   அ) ஊறு ஆ) விழு இ) எழுதல்

II. **பொருத்துக.** 4 × 1 = 4

9. அ. கற்கும் முறை - செயல்

ஆ. உயிர்க்குக் கண்கள் - பிழையில்லாமல் கற்றல்

இ. விழுச்செல்வம் - எண்ணும் எழுத்தும்

ஈ. எண்ணித் துணிக - கல்வி

III. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

10. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
11. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
12. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
13. ஓவியங்களின் வகைகள் யாவை?
14. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. இயற்சொல்லின் வகைகள் யாவை?
16. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.

IV. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

17. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
18. பண்டிகை, கேணி என்பவை எவ்வகைச் சொற்கள்? விளக்குக.
19. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
20. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
21. கேலிச்சித்திரம் என்றால் என்ன?

V. **எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 5 = 5

22. ‘ஆழ்கடலின் அடியில்’ கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

மலர்விழியும் தமிழரசியும் பேசிய தலைப்பின் கீழ்வரும் கருத்துக்களைப் பதிவு செய்க.

VI. **மனப்பாடப் பகுதி.** 1 × 4 = 4

23. ‘கட்டி’ எனத் தொடங்கும் ‘கீரைப்பாத்தியும் குதிரையும்’ என்ற பாடலை அடிமாறாமல் எழுதுக.

**VII. எவையேனும் ஐந்தனுக்கு விடையளி.** 5 × 2 = 10

**வினா எண் (30)க்கு கட்டாயமாக பதில் எழுத வேண்டும்.**

24. ஓர் எழுத்து ஒரு மொழியைக் கொண்டு நிறைவு செய்க.

அ) முக்கனிகளுள் ஒன்று [ ]

அ) அளவில் பெரிய நகரம் [ ][ ][ ][ ][ ]

25. சரியான பகுபத உறுப்பை எழுதுக. அ) பார்த்தான்

26. கலைச்சொல் எழுதுக.

அ) Discipline ஆ) Harbour

27. சொற்றொடரில் அமைத்து எழுதுக. அ) காற்றின் திசை

28. சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.

அ. ________________ பெயர் என்ன?

ஆ) ________________ ஏழாம் வகுப்பு மாணவர்கள்

இ) ________________ எப்படி ஓடும்?

ஈ) ________________ வந்து கொண்டு இருக்கிறார்கள்.

(அது, நீ, அவர்கள், அவைகள், அவை, நாம், என், உன்)

29. சொல்லுக்கு பொருள் தருக.

அ) வங்கம் ஆ) பரிதி இ) வனப்பு ஈ) பரி

30. ‘இழுக்கு’ என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

**VIII. விளம்பரங்களைப் பார்த்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 1 = 5

31.

**மதுரையில் தென்னிந்திய நூல் விற்பனையாளர் சங்கம் நடத்தும்**

**ஐந்தாவது புத்தகக் கண்காட்சி**

**கழிவு 10 விழுக்காடு**

இடம் : தமுக்கம் மைதானம் — நாள் : 10.12.2023 - 20.12.2023

மதுரை - 625002 — நேரம் : காலை 11 - இரவு 9 மணி

வினாக்கள்:

அ) இவ்விளம்பரம் எதனைப் பற்றியது?

ஆ) புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?

இ) புத்தகக் கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?

ஈ) புத்தகம் வாங்குவோருக்கு எத்தனை விழுக்காடு கழிவு தரப்படுகிறது?

உ) புத்தகக் கண்காட்சி நடத்துவோர் யார்?

IX. **கடிதம்.** **1 × 5 = 5**

32. உங்கள் பகுதியில் பூங்கா ஒன்று அமைத்துத் தர வேண்டி மாவட்ட ஆட்சியாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.